பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 29 திங்கட்கிழமை 14.12.2020 கதிர் 269

## இந்திய மீனவர்களுக்கு எதிராக முல்லையில் நாளை போராட்டம்

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்திய மீனவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு மீனவர்கள் நாளை போராட்டத்தில் ஈடுபட வுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு 2

# தனியே ஒரு பிரதேசத்தை முடக்குவதில் பயனில்லை யாழில் தற்போது 1,144 குடும்பங்கள் சுயதனிமையில்

### மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பரவலாகத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதால், தனியே ஒரு பிரதேசத்தை மாத்திரம் முடக்குவது பயனில்லை என்பதாலயே உடுவில் பிரதேச முடக்கம் தளர்த்தப்பட்டது.

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது 1,144 குடும்பங்கள் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தின் தற்போதய நிலை குறித்து இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2



### மேலும் 122 கைதிகளுக்குக் கொரோனா

## 3 ஆயிரத்தைத் தாண்டியது சிறைச்சாலை கொத்தணி!

சிறைச்சாலைக் கொத்தணியில் இன்று மேலும் 122 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று தொற்று உறுதியானவர்களில் 120 பேர் தண்டனை விதிக்கப்பட்ட ஆண் கைதிகள் எனவும், ஏனைய இருவரும் விளக்கமறியலிலுள்ள ஆண் கைதிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2

## கொரோனா வைரஸின் பிடிக்குள் இருந்து இதுவரை 24 ஆயிரத்து 309 பேர் மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 516 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்து 309 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 8 ஆயிரத்து 329 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 152 பேர் உயிரிழந்துள்ளனர்.

# வெடித்துச் சிதறியது கிரைண்டரில் அரைத்த ரி.என்.ரி. வெடிபொருள்

### 3 சிறுவர்கள் உட்பட 8 பேர் படுகாயம்; யாழ். குருநகரில் நேற்றிரவு சம்பவம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், குருநகரில் ரி.என்.ரி. வெடிபொருளைக் கிரைண்டரில் போட்டு அரைத்தபோது அது வெடித்தமையால் இரு குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் படுகாயமடைந்தனர்.

குருநகர் பகுதியில் நேற்றிரவு டைனமட் தயாரிக்கும் நோக்கில் ரி.என்.ரி. வெடிபொருளைத் தூளாக்க மீனவர் ஒருவர் முயன்றுள்ளார். குறித்த வெடிபொருள் அதிக கல்லுத் தன்மையாகக் காணப்பட்டுள்ளது. 2

### கொரோனாத் தொற்று அபாயத்தையடுத்து

## யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலய சகல பாடசாலைகளும் இழுத்து மூடல்!

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களுக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய கல்வி அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2

## மருதனார்மடம் கொத்தணி: மேலும் ஐவருக்குத் தொற்று

யாழ்., மருதனார்மடம் கொத்தணியில் மேலும் ஐவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மருத்துவபீட ஆய்வுகூடத்தில் இன்று 98 பேருக்கு கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 8 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஏழாலையைச் சேர்ந்த 3 பேருக்கும், 2

## ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவர் சம்பிக்க?

ஜாதிகஹெலஉறுமயவின்பொதுச் செயலாளர் பதவியிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விலகியுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் அவருக்குப் புதிய பதவியொன்று வழங்கப்படவுள்ளது என தெரியவருகின்றது.

இதன்படி அவர் ஐக்கிய மக்கள் சக்தியின்பிரதித்தலைவராகநியமிக்கப்படலாம் என அறியமுடிகின்றது 2

## கொரோனா வைரஸின் பிடிக்குள் இருந்து இதுவரை 24 ஆயிரத்து 309 பேர் மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 516 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்து 309 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 8 ஆயிரத்து 329 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 152 பேர் உயிரிழந்துள்ளனர்.




## இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கைதுசெய்யவும்!

### வடக்குக் கடற்படையினருக்கு அவசர உத்தரவு

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண மீனவர்களின் போராட்டத்தையடுத்து இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்தியமீனவர்கள் அனைவரையும் படகுகளுடன் கைதுசெய்யுமாறு வடக்குக் கடற்படையினருக்கு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதால் இலங்கை மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுவது மட்டுமன்றி தொழில் உபகரணங்களும் சேதமடைகின்றன. எனவே, இலங்கைக் 2

# 2,433 கிலோ மஞ்சள், 50 கிலோ ஏலம் தலை மன்னாரில் வாகனத்துடன் சிக்கியது

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,டிச.14

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட 2,433 கிலோ கிராம் மஞ்சள் கட்டி மற்றும் 50 கிலோ ஏலக்காய் போன்றவை தலைமன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள கட்டுக்காரன் குடியிருப்பு பகுதியில் வைத்து இன்று திங்கட்கிழமை காலை கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி கட்டுக்காரன் குடியிருப்பு காட்டுப்பகுதியில் அமைந்துள்ள கோயிலுக்கு சற்றுத் தொலைவில் கடற்கரை பகுதியில் இன்று திங்கட்கிழமை காலை நிறுத்தி வைக்கப்பட்ட மகேந்திர ரக வாகனத்தில் குறித்த மஞ்சள் மூடைகள் மற்றும் ஏலக்காய் மூடை என்பன இராணுவம் மற்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட 2,433 கிலோ கிராம் மஞ்சள் கட்டி மற்றும் 50 கிலோ ஏலக்காய் போன்றவை தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸார் இந்த நபர்களிடம் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.



விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள், நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளமையோடு மீட்கப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் , ஏலக்காய் மூடை ஆகியவை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா ஆபத்து சூழலில் மாகாண சபை தேர்தல் ஏன்?

## எல்லே குணவன்ச தேரர் கேள்வி

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நிலவும் சூழ்நிலையில் இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் பெருந்துயரம் மற்றும் நெருக்கடிகளின் மத்தியில் வாழ்கின்றனர் எனச் சுட்டிக்காட்டிய சிங்கலே அமைப்பின் எல்லே குணவன்ச தேரர், இந்தத் தருணத்தில் தேர்தல்களை நடத்துவது அரச முதலீட்டை வீணடிக்கும் மற்றுமொரு செயலாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் ஆபத்து நிலவுகின்ற சூழலில் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பில் கண்டனம் வெளியிட்டுள்ள அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது மக்கள் கேட்கும் தேர்தல் இல்லை எனத் தெரிவித்த அவர், மக்கள் நிராகரித்துள்ள மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது அரசுக்கு விசுவாசமானவர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கான முயற்சியாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் வடக்கு - கிழக்கு மக்கள் கூட மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரவில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், மாகாண சபைத் தேர்தலை நடத்த அரச ஆர்வம் காட்டுவது ஏன்? எனவும் கேள்வி எழுப்பினார்.

## யாழ்ப்பாணம், வலிகா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருதனார்மடம் கொரோனாத் தொற்றுப் பரவல் கொத்தணியின் பின்னர் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை மூடப்பட்டன.

இந்தநிலையில், வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் நாளை தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய மக்கள் சக்தி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி பண்டாரவளையில் நடைபெறவுள்ளது. இதன்போது இது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படலாம் என அறியமுடிகின்றது.

## இலங்கைக் கடற்பரப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துங்கள் என மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமையில் இந்திய மீனவர்கள் சிலர் படகுகளுடன் கைது செய்யப்படுவது வழமையாக இருந்தபோதும் இந்த வருடம் இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்தமையால் இந்திய மீனவர்களைக் கைதுசெய்யும் கடற்படையினரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுகின்றனர் என்ற காரணத்தைக் காட்டி இந்திய மீனவர்கள் கைது இடைநிறுத்தப்பட்டது.

கொரோனா காரணமாக இலங்கைக் கடற்படையினர், எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கைது செய்வதில்லை என்ற தகவல் இந்தியாவில் பரவிய காரணத்தால் இந்திய மீனவர்கள் முல்லைத்தீவு, நெடுந்தீவு, பருத்தித்துறை என வடக்கின் சகல பகுதிகளிலும் கரையில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றருக்கும் உட்பட்ட பகுதியில் படகுகளுடன் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் தமது வாழ்வாதாரம் அழிக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது எனத் தெரிவித்த உள்ளூர் மீனவர்கள் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்ற தகவல் வெளிவந்திருந்தது.

இவ்வாறான ஒரு சூழலிலேயே வடக்கு மாகாண கடற்படையினருக்கு அவசர உத்தரவு ஒன்று இன்று காலை அரசின் உயர்மட்டத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள் அனைவரையும் படகுகளுடன் கைதுசெய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் இன்று முதல் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3 ஆயிரத்தைத் தாண்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 87 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 103 சிறைச்சாலை அதிகாரிகளும் அடங்குகின்றனர் எனவும் சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## தனியே ஒரு பிரதேசத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு 59 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இதில் 18 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் ஏற்கனவே 744 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று சுமார் 400 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் தற்போது மொத்தமாக 1,144 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று தொற்று உறுதி செய்யப்பட்ட 26 தொற்றாளர்களும் மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுவதால், ஒரு பிரதேசத்தை மாத்திரம் முடக்கிப் பயனில்லை என்பதனாலே உடுவில் பிரதேச முடக்கம் தளர்த்தப்பட்டுள்ளது.

ஆனால், மருதனார்மடம் பொதுச்சந்தை மற்றும் அதனோடு அருகிலுள்ள கடைத் தொகுதிகள் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் - என்றார்.

## மருதனார்மடம் கொத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணுவிலைச் சேர்ந்த 2 பேருக்கும், வவுனியாவைச் 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. ஏழாலை மற்றும் இணுவில் தொற்றாளர்கள் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புபட்டவர்கள்.

வவுனியா தொற்றாளர்களில் ஒருவர் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்தவர். இருவர் வவுனியா திருநாவற்குளம் மற்றும் கற்குழியைச் சேர்ந்தவர்களாவர் - என்றார்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் செய்யப்பட்ட முடிவுகள் பின்னர் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெடித்துச் சிதறியது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் அந்த வெடிபொருளை கிரைண்டரில் போட்டு குறித்த மீனவர் அரைத்துள்ளார்.

இதன்போது அது பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியுள்ளது.

இந்த அனர்த்தத்தில் சிக்கி வீட்டிலிருந்த 8 பேர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு படுகாயமடைந்தவர்களில் மூவர் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## இந்திய மீனவர்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள், வர்த்தகச் சங்கங்கள் மற்றும் நலன்புரி அமைப்புக்கள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் மீனவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

அண்மைக்காலமாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்படையினர் எனப் பல்வேறு தரப்பினிடமும் முறையிட்டிருந்தபோதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தநிலையில், கடந்த 12ஆம் திகதி மீனவர்கள் தாமே முன்வந்து, இந்திய இழுவைப் படகுகளை முல்லைத்தீவு கடற்பரப்பிலிருந்து விரட்டுவதற்கு படகுகளில் கடலுக்குச் செல்லத் தயாராகியிருந்தனர்.

இதன்போது அங்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் மாவட்ட கடல்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை தொடர்பான பிரச்சினையை உரியவர்களுக்குத் தெரியப்படுத்தி இன்று திங்கட்கிழமைக்குள் தீர்வு பெற்றுத்தருவோம் என்று உறுதியளித்தனர்.

இருப்பினும் இதுவரை இந்தப் பிரச்சினை தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

இந்தநிலையிலேயே நாளை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

எனவே, இந்தப் போராட்டத்திற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நமக்கும் வேண்டும் தடுப்பூசி

உலகம் முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கின்றது கொரோனா வைரஸ்.

இலங்கைக்கும் அதில் விலக்களிப்பில்லை. இப்போதுதான் கொரோனா கொடூரனின், அரூபக் கரங்களின் கொடும் பிடியை உணரும் நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இந்த வைரஸ் முதலில் இலங்கையில் ஊடுருவிய போது வெலிசறை கடற்படை முகாம், கந்தக்காடு புனர்வாழ்வு முகாம் என்ற புதிய, புதிய கொத்தணிகளாகப் பரவல் வியாபித்தது.

எனினும் அவற்றை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தி, ஒழுங்கு முறைக்குள் கொண்டு வந்தது அரசு. பொலிஸாரும், முப்படையினரும், மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையினரும் கூட்டிணைந்து அரும் பணியாற்றி, விவகாரத்தை ஒழுங்குக்குள் கொண்டு வந்தனர்.

ஆனால், நிலைமை மீண்டும் இப்போது கட்டு மீறி விட்டது.

மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையில் தொடங்கியதாகக் கூறப்படும் கொத்தணி, இப்போது பேலியகொடை, கொழும்பின் பல பகுதிகள் என்று பரவி, கிழக்கில் அக்கரைப்பற்று கொத்தணி என்று வியாபித்து, இப்போது சிறைச்சாலை கொத்தணி, பொலிஸ் கொத்தணி என்று தொடர்ந்து வடக்கில் யாழ்ப்பாணம் வரை முன்னேறிவிட்டது.

புதிது, புதிதாக இடங்களின் பெயர்களில் கொரோனாக் கொத்தணிகள் உருவாகும் ஆபத்து நிலைமை.

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்று இங்கு ஒரு புதிய கொத்தணியை உருவாக்குமோ என்ற அச்சம் பல மட்டங்களிலும் பரவி வருகின்றது.

பொதுவாகத் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கையின் முப்பது வீதமான அளவுக்கு அடையாளம் காணப்படாமல் சமூகத்தில் தொற்றாளர்கள் இருப்பர் என்று கணிக்கப்படுகின்றது.

இப்போது கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலைக்குப் பின்னர் மொத்தமாக – அண்ணளவாக – முப்பதாயிரம் பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி பார்த்தால் அடையாளம் காணப்படாமல் ஏறத்தாழ இன்னும் ஒன்பதாயிரம் பேர் வரை தொற்றாளர்களாக – இந்த வைரஸ் பீடிப்பின் குணங்குறியைக் கேட்டாமல் – சமூகத்தில் இருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

இந்த நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கையில் கொரோனா வைரஸுடனான வாழ்க்கை தவிர்க்க முடியாதது, புறந்தள்ள இயலாதது, கட்டாயமானது என்பது புரிகின்றது.

உலக வல்லரசுகள் கூட கண்ணுக்குத் தெரியாத வைரஸுடன் இப்படித்தான் சமரசம் செய்து கொண்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசி மூலம் இந்த வைரஸ் தமது பிரஜைகளுக்குத் தொற்றாமல் தடுப்பதற்கு அந்த நாடுகள் எல்லாம் தீவிர முயற்சியை ஆரம்பித்திருந்தாலும் அவை எவ்வளவு தூரம் வெற்றியளிக்கப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால், நமது நாட்டைப் பொறுத்த வரையில் அந்தத் தடுப்பூசிகள் கூட அடுத்த ஆறு மாதத்துக்குள் சாத்தியமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அத்தகைய தடுப்பூசிகளைப் பெறுவதற்கோ, சுவீகரிப்பதற்கோ கட்டுறுதியான நடவடிக்கை எதனையும் அரசு எடுத்ததாகத் தெரியவில்லை. குறைந்தபட்சம் பெரும் செலவை ஏற்படுத்தக் கூடிய அத்திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து ஆராயக் கூடக் கொழும்பு நிர்வாகம் தயாரானதாகத் தெரியவில்லை.

நிதி உதவியும், தடுப்பூசியும் கிடைத்தாலும் கூட, அதனை நமது நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கான ஓர் ஒழுங்கு முறைக்கு நாடும், அரசும் தயாராகின எனவும் தெரியவில்லை.

யாருக்குத் தடுப்பூசி போடுவது? நோய்த் தொற்று வந்து பூரண குணமடைந்தவருக்கும் அதைச் செலுத்த வேண்டுமா? தொற்றுச் சிகிச்சையில் இருப்பவருக்கு தடுப்பூசி செலுத்தலாமா? செலுத்தினால் பாதிப்பு ஏற்படாதா? தடுப்பூசி ஏற்ற முதல் ஒரு நபருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதா, இல்லையா என்பதை உறுதி செய்ய வேண்டுமா? அப்படி உறுதி செய்வதாயின் அதற்கான செலவினம், தடுப்பூசியை விட அதிகமானதாக இருக்குமா? – என்பவை போன்ற பல விஞ்ஞானபூர்வமான கேள்விகள் உள்ளன.

உலக நாடுகள் எல்லாம் கொரோனாத் தடுப்பூசியைத் தங்கள் பிரஜைகளுக்கு வழங்குவது பற்றிய திட்டங்களில் முண்டியடித்துக் கொண்டிருக்க, நாம் நமது நாட்டில் ஏற்படும் தொற்று புதிய கொத்தணியா அல்லது நிலைமை சமூகத் தொற்றை எட்டிவிட்டதா என்று விவாதித்துக் கொண்டிருகின்றோம்.

தொற்று ஏற்பட்ட எண்ணிக்கை பற்றி சர்ச்சைப்படுகின்றோம். அதிகாரிகள், மருத்துவர்கள் குறித்து குறை கூறிக் கொண்டிருக்கின்றோம்.

நமது சமூக, அரசியல் தலைவர்களோ, அல்லது நாமோ – உலகத்துடன் ஒத்து ஓடுவது போல –இங்கும் நமது மக்களுக்கு – நமக்கு – தடுப்பூசி கிட்ட வேண்டும் என்ற விவகாரம் குறித்து அழுத்தமாகவும் உறுதியாகவும், தெளிவாகவும் இன்னும் பேசத் தொடங்கவில்லை. இது பின்னடைவு நிலைதான்.

# முஸ்லிம்களின் உடல் தகனம் எதிர்த்து லண்டனில் போராட்டம்!




கொரோனா வைரஸால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களைத் தகனம் செய்வதற்கு, எதிராக லண்டனில் நேற்றுமுன்தினம் சனியன்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

லண்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக சுமார் நான்கு மணி நேரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்தப் போராட்டம் புலம் பெயர்ந்து வாழும் இலங்கை முஸ்லிம்கள் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில், லண்டனில் வாழும் கிறிஸ்தவ சமூகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு இலங்கை அரசுக்குத் தங்களின் எதிர்ப்பை பதிவு செய்திருந்தனர்.

மேலும் இதன்போது இறக்கும் முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்றும் கோசமெழுப்பப்பட்டது.

எதிர்ப்பு வசனங்களையும் கோசங்களையும் எழுப்பியவாறு போராட்டக்காரர்கள் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பி.சி.ஆர். சோதனைக்கு ஒத்துழைக்காத நபர்களின் சொத்துக்கள் முடக்கப்படும்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை

கொவிட் – 19 வைரஸ் தொற்றை உறுதி செய்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து, அவர்களது சொத்துக்களை தடை செய்வதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.



வைரஸ் பரவல் காரணமாக தனிமைப் படுத்தப்பட்டுள்ள அட்டலுகம போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று தெரியவந்துள்ளது.

இது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பான செயற்பாடாகும். அதனால் இத்தகைய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கமுடியும்.

இதன்போது அவர்களது சொத்துக்களை பயன்படுத்த முடியாத வகையில் தடைமுத்திரை குத்தவும் அனுமதியுள்ளது. அதனால் சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைய செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய ஒக்ரோபர் மாதம் முதல் இது வரையில் 1,349 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பண்டிகைக் கால கொண்டாட்டங்களின் போதும் பொதுமக்களை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்றுமாறு கோருகின்றோம் என்றும் கூறினார்.

# மயங்கி வீழ்ந்த இரு பிள்ளைகளின் தாய் அராலியில் 7 நாள்களின் பின்னர் சாவு!

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி கிழக்கைச் சேர்ந்த பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புகான காரணம் தொடர்பில் கண்டறிவதற்கு குருதி மாதிரிகள் பெறப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அராலி கிழக்கைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயான மதுசன் பிரபாகினி (வயது – 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி அவர், வீடு பெருக்கிக் கொண்டிருக்கும் போது மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்நிலையில் 7 நாள்களின் பின்னர் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணத்தை கண்டறிவதற்கு குருதி மாதிரிகள் பெறப்பட்டு கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கண்டி நிலநடுக்கம்:

# ஆய்வுக்குழு அறிக்கை இம்மாத இறுதியிலேயே!

கண்டி – திகண பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பதிவான சில நில அதிர்வுகள் தொடர்பிலான ஆய்வுகுழுவினரின் அறிக்கை இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்தப் பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அதனுடன் தொடர்புடைய அமைச்சர் மஹிந்த அமரவீரவால் புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து 5 பேர் அடங்கிய விசேட நிபுணர்கள் கண்டி – திகண பகுதிக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். குறுகிய காலத்திற்குள் அந்தப் பகுதியில் மூன்று நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

பூமியின் உட்புறத்தில் உள்ள சுண்ணாம்பு பாறைகளில் ஏற்பட்டுள்ள அழுத்தம் காரணமாக இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் குறித்த நில அதிர்வு காரணமாக விக்டோரிய நீர்த்தேக்கத்திற்கு சேதம் ஏற்படுமா, இல்லையா என்பது தொடர்பாகத் தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்துள்ளார்.

# ஊழல் பேர்வழிகளை ஒழித்துக்கட்ட நேரம் வந்துவிட்டது - கமல்ஹாசன்

ஊழல் பேர்வழிகளை ஒழித்துக்கட்ட நேரம் வந்துவிட்டதாக நடிகரும், மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

'சீரமைப்போம் தமிழகத்தை' என்ற பெயரில் தேர்தல் பிரசார பயணத்தை ஆரம்பித்துள்ள கமல், தொழில் வர்த்தக சங்கத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்துள்ள அவர் –

பல நூற்றாண்டுகள் பழைமையான சரித்திர புகழ் பெற்றது மதுரை. 1919 இல் காந்தி, ரவுலட் சட்டத்தை எதிர்த்து இளைஞர்களைத் திரட்டிய போது இந்த மதுரை அவருக்குக் கை கொடுத்தது. அவருடைய ஆடையை மாற்றியது மதுரை விவசாயி.

அரை நூற்றாண்டுகளாக மதுரையின் கலாசாரம் அழிந்து விட்டது. மதுரையை இரண்டாம் தலைநகராக மாற்றிக்காட்ட வேண்டும் என்பது எம்.ஜி.ஆரின் கனவு. அவரது கனவின் தொடர்ச்சி நான்.

அவருடைய கனவை நிகழ்த்திக் காட்டாமல் உறங்கிக் கொண்டிருக்கும் ஊழல் பேர்வழிகளை ஒழித்துக்கட்ட நேரம் வந்துவிட்டது. அரசியல் இளைஞர்களை பாதித்துவிட்டது. அதற்குப் பதில் கொடுக்க அரசியலில் இளைஞர்கள் தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.



அதற்காக இளைஞர்கள் அரசியலுக்கு வரவேண்டும். வரும் ஜனவரியில் காளைகளுடன் ஜல்லிக்கட்டு நடக்கும். மே மாதம் தேர்தலில் கயவர்களுடன் மல்லுக்கட்டுவோம். அதற்கு நாம் தயாராக வேண்டும். 37 ஆண்டுகள் நற்பணி செய்தால் போதும் என நினைத்தேன். ஆனால் என்னை அவ்வாறு வாழ விடவில்லை.– எனத் தெரிவித்துள்ளார்.

# மம்தா பானர்ஜியை கூலிப்படை மூலம் கொலை செய்வதற்கு பா.ஜ.க திட்டம்!

## சுப்ரதா முகர்ஜி தெரிவிப்பு

மம்தா பானர்ஜி அரசை சட்ட சபை தேர்தலில் தோற்கடிக்க பாரதிய ஜனதா திட்டமிட்டுள்ளதாகவும், அது நடைபெறாத பட்சத்தில் அவரை கூலிப்படை மூலம் கொலை செய்ய பா.ஜ.க திட்டமிட்டுள்ளதாகவும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான சுப்ரதா முகர்ஜி கூறியுள்ளார்.

மேற்கு வங்காள மாநிலத்தில் இடம்பெற்ற விழாவொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

மம்தா பானர்ஜி அரசை சட்ட சபை தேர்தலில் தோற்கடிக்க பாரதிய ஜனதா திட்டமிட்டுள்ளது. ஒருவேளை தோற்கடிக்க முடியாவிட்டால், மம்தா பானர்ஜியை கொலை செய்ய பாரதிய ஜனதா சதித்திட்டம் தீட்டக்கூடும்.



கூலிப்படை மூலம் இதை செய்து விட்டு மற்றவர்கள் மீது பழி போடக்கூடும். கோடிக்கணக்கான மக்களுக்கு தாய் போல் இருக்கும் மம்தா பானர்ஜிக்கு ஏதேனும் தீங்கு விளைவிக்க முயன்றால் அதைத் தடுக்க நாங்கள் இரத்தம் சிந்தத்தயார்.

பாரதிய ஜனதா தலைவர் ஜே.பி.நட்டாவாகன அணிவகுப்பு மீது கல் வீச பாரதிய ஜனதாவே ஆள்களை ஏற்பாடு செய்ததாக விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.– எனத் தெரிவித்துள்ளார்.

# மீன் வளத்துறை செயற்பாட்டை கண்டித்து தமிழக மீனவர்கள் முற்றுகைப் போராட்டம்!



விசைப்படகுகள் மீன் பிடிக்க செல்ல அனுமதி மறுத்த மீன் வளத்துறையினரை கண்டித்து தமிழக மீனவர்கள் இன்று (திங்கட்கிழமை) முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிய மீன்பிடி விசைப்படகுகள், ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க செல்ல மீன்வளத்துறையினர் அனுமதி மறுத்தமையை கண்டித்தே இவர்கள் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தியாவின் தமிழகத்தில் ராமேஸ்வரம் துறைமுகத்தில் சுமார் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக வெளி மாவட்டங்களான கன்னியாகுமரி, தூத்துக்குடி, நாகப்பட்டினம், காரைக்கால் பகுதிகளில் இருந்து மீனவர்களின் மீன்பிடி படகுகளை விலைக்கு வாங்கி வந்து ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர்.

புரெவி மற்றும் நிவர் புயல் காரணமாக மீன்பிடி விசைப்படகுகளை ராமேஸ்வரம் துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்த, மீன் வளத்துறையினர் அறிவுறுத்தியிருந்த நிலையில் ராமேஸ்வரம் மீனவர்கள் தங்களது படகுகளை பாதுகாப்பாக நிறுத்த போதிய இடம் இல்லாததால் நூற்றுக்கு மேற்பட்ட விசைப்படகுகள் பாம்பன் பாலம் வழியாக பாம்பன் குந்துகாலில் நிறுத்தினர்.

இதனால், புதிய விசைப்படகுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் படகுகளை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து அப்புறப்படுத்துமாறு மீன்வளத் துறை அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இதனையடுத்து இன்று புதிதாக ராமேஸ்வரம் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த 23விசைப்படகுகளுக்கு, மீன்வளத் துறையினரால் வழங்கப்படும் மீன்பிடி அனுமதி இரத்து செய்யப்பட்டது.

இதனை கண்டித்து படகுகளின் உரிமையாளர்கள் மற்றும் மீனவர்கள் என சுமார் 50 இற்கும் மேற்பட்டோர், மீன்வளத்துறை அதிகாரிகள் அலுவலகத்தில் அமர்ந்து முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடத்திய பேச்சுகளில், மீன்வளத்துறை உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தையடுத்து, மீனவர்கள் கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியதாக தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டை துண்டாட முயற்சிக்கும் குழுக்கள் மீது மோடி அரசு நடவடிக்கை எடுக்கும் - ரவிசங்கர்

விவசாயிகள் போராட்டத்தை சாதகமாகப் பயன்படுத்தி நாட்டைத் துண்டாட முயற்சிக்கும் குழுக்கள் மீது மோடி அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



விவசாயிகள் போராட்டத்தில் மாவோயிஸ்டுகள் ஊடுருவி இருப்பதாக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் கூறியுள்ள நிலையில், பா.ஜ.க சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ரவிசங்கர் பிரசாத் மேற்படி கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

வேளாண் சட்டங்களை மீளப்பெறும்வரை போராட்டத்தைக் கைவிட மாட்டோம் என்று போராட்டக்காரர்கள் கூறுகிறார்கள்.

மோடி அரசு விவசாயிகளை மதிக்கிறது. அதே சமயத்தில் விவசாயிகள் போராட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த பார்க்கும் குழுக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்.

நாட்டை துண்டாட வேண்டும் என்று பேசும் இவர்கள் யார் என்று கேட்க விரும்புகிறேன். டெல்லியிலும் மராட்டியத்திலும் கலவரத்தில் ஈடுபட்டதற்காக சிறையில் இருக்கும் அறிவுஜீவிகளை விடுதலை செய்யுமாறு இவர்கள் கோருகிறார்கள். – எனத் தெரிவித்துள்ளார்.


# கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1993.12.31
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூசம்
சூ/செவ் - 12இல்
பாவம் - 31 1/2
கல்வி - Engineering
தொழில் - Engineer
எதிர்பார்ப்பு - Doctor / Engineer

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1993.11.25
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி
பாவம் - 20 1/4
செவ் - 12இல்
கல்வி - A/L
தொழில் - -
எதிர்பார்ப்பு - வெளிநாடு

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


# ஐ போன் நிறுவனத்தில் வன்முறை; ஆயிரக்கணக்கான போன்கள் மாயம்!

## 440 கோடி ரூபா நஷ்டம்

கர்நாடக மாநிலத்திலுள்ள ஐ போன்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள வெஸ்ரேன் நிறுவனத்தில் சம்பளம் தராத காரணத்தால் ஊழியர்கள் வன்முறையில் ஈடுபட்டமையால், 440 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கோலார் மாவட்டத்திலுள்ள நரசபுரா என்ற இடத்தில் தைவான் நாட்டை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வெஸ்ரேன் நிறுவனம் ஆப்பிள் நிறுவனத்தின் ஐ போன்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் லெனோவா, மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் லேப் டாப்களையும் இந்த நிறுவனம் தயாரிக்கிறது. இரண்டு ஷிப்ட்களாக பணி நடைபெறும் இந்த நிறுவனத்தில் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பணியாளர்கள் பணி புரிந்து வந்திருக்கிறார்கள்.

கடந்த 4 மாதங்களாக இந்த நிறுவனத்தின் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், போராட்டத்தில் ஈடுபட்டு வந்த ஊழியர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். நிறுவனத்தில் கையில் கிடைத்த பொருள்களையெல்லாம் சேதப்படுத்தியதோடு, வாகனங்களுக்கும் தீ வைத்தனர்.

இந்த நிலையில், விஸ்டர்ன் நிறுவனம் தங்கள் நிறுவனத்திலிருந்து ஆயிரக்கணக்கான ஐ போன் காணாமல் போயுள்ளதாகவும் சேதப்படுத்தப்பட்டதாகவும் முறைப்பாடு செய்துள்ளது. இந்த வன்முறையில் 440 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் வெஸ்ரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பைஸரின் கொரோனா தடுப்பூசியை இந்தியா வாங்காது எனத் தகவல்!

அதிகமான விலை மற்றும் மைனஸ் 70 டிகிரியில் வைக்க வேண்டிய நிலை ஆகியவற்றால் பைஸரின் கொரோனா தடுப்பூசியை இந்தியா வாங்காது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



5 நாடுகளில் அவசரகால அனுமதிக்கான ஒப்புதலை பெற்றுள்ள இந்தத் தடுப்பூசியை இந்தியா வாங்க வேண்டுமானால் ஊசி ஒன்றுக்கு 2 ஆயிரத்து 728 ரூபா கொடுக்க வேண்டும்.

அதேநேரம் இந்தியாவில் சீரம் இந்தியா நிறுவனத்தால் உருவாக்கப்படும் கோவிஷீல்டு தடுப்பூசியின் விலை 737 ரூபா மட்டுமே ஆகும்.

அரசுகள் வாயிலாக மட்டுமே அந்தந்த நாடுகளுக்கு தடுப்பூசியை விற்கவுள்ளதாக பைஸர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே, குறைந்த விலைக்கு உள்நாட்டு தயாரிப்பு கிடைக்கும் நிலையில், அதிக விலை உள்ள பைஸரின் தடுப்பூசி இந்தியாவுக்கு வர வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை நடத்த ஒப்புதல்: பிரித்தானியா - ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு!

பிரெக்ஸிற்றுக்குப் பின்னரான வர்த்தகப் பேச்சுகளை நடத்துவதற்கு பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன ஒப்புக்கொண்டுள்ளன.

வர்த்தகப் பேச்சுகளைத் தொடர்வது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்படும் என பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வொன் டெர் லேயனும் முன்னர் அறிவித்திருந்தனர்.



இந்நிலையில், பிரெக்ஸிட் வர்த்தகப் பேச்சுக்களை நடத்துவதற்கு இரு தரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இதன்படி, பேச்சுகளை பிரஸ்ஸலில் நடத்துவதற்கு இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த இக்கட்டான கட்டத்தில் ஓர் உடன்பாட்டை எட்டமுடியுமா என்பதை அறிய, இந்தப் பேச்சுகள் எவ்வளவு காலம் தொடரும் என அவர்கள் தெரிவிக்கவில்லை.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானிய எதிர்வரும் 31ஆம் திகதியுடன் முழுமையாக வெளியேறுகிறது.

இந்நிலையில், இதற்கு முன்னர் ஏற்படுத்தப்படும் எந்தவோர் ஒப்பந்தத்திலும் வாக்களிக்க இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்கு காலம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானிய ஊடகவியலாளர் தூக்கிட்டமை: ஜேர்மனி தூதரை அழைத்து கண்டனம்!



2017 ஆம் ஆண்டு அரச எதிர்ப்பு போராட்டங்களின் போது வன்முறையைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஈரானிய ஊடகவியலாளர் ருஹொல்லா சேம் தூக்கிலிடப்பட்ட விவகாரத்துக்கு, ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்த கருத்துக்கு தங்கள் நாட்டுக்கான ஜேர்மனித் தூதரை ஈரான் நேரில் அழைத்து கண்டனம் தெரிவித்தது.

ஈரானுக்கான ஜேர்மனி தூதரை ஈரான் அரசாங்கம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நேரில் அழைத்து இதுதொடர்பான தனது அதிருப்தியைப் பதிவு செய்தது.

இதுதவிர பிரான்ஸ் தூதரையும் அழைத்து இதுதொடர்பாகக் கண்டனம் தெரிவிக்க ஈரான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சேமின் வலைத்தளமும் பிரபலமான செய்தியிடல் பயன்பாடான டெலிகிராமில் அவர் உருவாக்கிய ஓர் அலைவரிசையிலும் ஈரானின் அரசாங்கத்துக்கு நேரடியாகச் சவால் விடுத்த அதிகாரிகளின் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சங்கடமான தகவல்கள் பரப்பப்பட்டன.

இதனால், அவர் மீது ஈரானிய அரசாங்கம் வன்முறையைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டியது. இதனையடுத்து அவர் பிரான்ஸில் தஞ்சமடைந்திருந்தார்.

எனினும், அவர் ஈராக் பயணம் சென்றபோது 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஈரானின் புரட்சிகர காவல்படையினரால் கைது செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் கடந்த சனிக்கிழமை தூக்கிலிடப்பட்டார்.

# அமெரிக்காவில் இன்று முதல் பொதுமக்களுக்குத் தடுப்பூசி

உலகளவில் கொரோனா வைரஸ் பாதிப்பில் முதலிடத்தில் இருந்து வரும் அமெரிக்காவில் இன்று (திங்கட்கிழமை) முதல் பொதுமக்களுக்கு தடுப்பூசி போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பைஸர் நிறுவனம் தயாரித்துள்ள கொரோனா தடுப்பூசியை அவசர தேவைக்குப் பயன்படுத்த அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் ஒப்புதல் அளித்தமையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கு தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக இந்த வார இறுதிக்குள் 30 லட்சம் தடுப்பூசிகள் அனைத்து மாகாணங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என கொரோனா தடுப்பூசி விநியோகத் திட்டங்களைக் கவனிக்கும்



மூத்த இராணுவ அதிகாரி குஸ்டாவ் பெர்னா கூறினார்.

கொரோனாவை ஒழிப்பதில் 95 சதவீதம் செயன்திறன் கொண்ட பைஸர் நிறுவனத்தின் தடுப்பூசி இங்கிலாந்தில் ஏற்கனவே மக்களின் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது.

இதுதவிர பக்ரைன், சவுதி அரேபியா, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகள் பைஸர் தடுப்பூசியை அவசரத் தேவைக்குப் பயன்படுத்த ஒப்புதல் அளித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 15.12.2020 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 கணிதம் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 08 விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 கணிதம் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 09 விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 07 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 கணிதம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 06 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 அரசியல் விஞ்ஞானம் (த) |

# ஐந்து கோடிக்கும் மேற்பட்டோர் கொரோனாவிலிருந்து மீண்டனர்!


*உலகளவில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றிலிருந்து ஐந்து கோடிக்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளனர்.*

*மொத்தமாக இதுவரை உலகளவில் வைரஸ் தொற்றால், ஏழு கோடியே 26 லட்சத்து 46 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றால் 16 லட்சத்து 18 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.*

*உலகளவில் கொவிட்-19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல்நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.*

# எவரெஸ்ட்டின் துல்லியமான உயரம் சீனா - நேபாளம் கூட்டாக அறிவிப்பு!



எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் அதிகாரபூர்வமாக சற்று அதிகரித்துள்ளது.

உலகின் மிக உயர்ந்த மலைச்சிகரமான எவரெஸ்ட்டின் உயரம் தொடர்பாக, சீனா மற்றும் நேபாளம் இடையே பல ஆண்டுகளாக சர்ச்சை உள்ளது.

சீனா – நேபாளம் இடையேயான எல்லை, எவரெஸ்ட் சிகரம் வழியாகச் செல்வதால், இரு நாடுகளும் கூடிப்பேசி, எவரெஸ்ட் சிகரத்தின் துல்லியமான உயரம் தொடர்பாகக் கூட்டாக அறிவித்துள்ளன.

அதன்படி, எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8,848.86 மீற்றர் அல்லது 29,031.69 அடி. இந்த அளவு, நேபாளம் ஏற்கனவே கூறிவந்ததைவிட 86 சென்ரி மீற்றரும், சீனா ஏற்கனவே கூறிவந்ததைவிட 4 மீற்றரும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவுக்கு நேர்மறை சோதனை செய்த ஈஸ்வதினியின் பிரதமர் அம்ப்ரோஸ் காலமானார்!

தெற்கு ஆபிரிக்க நாடான ஈஸ்வதினியின் பிரதமர் அம்ப்ரோஸ் டிலாமினி, உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸுக்கு நேர்மறையானதை பரிசோதித்த நான்கு வாரங்களுக்குப் பிறகு, 52 வயதான டிலாமினி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் வைத்தியசாலையில் காலமானார் என்று அரசாங்க அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.



முன்னர் ஸ்வாசிலாந்து என்று அழைக்கப்பட்ட ஈஸ்வதினியின் பிரதமராக டிலாமினி, ஒக்ரோபர் 2018 ஆம் ஆண்டு முதல் பதவி வகித்துவந்தார்.

தெற்கு ஆபிரிக்காவில் நிலத்தால் சூழப்பட்ட சுமார் 1.2 மில்லியன் மக்கள் வசிக்கும் சிறிய நாடான இது, உலகின் கடைசி முழுமையான முடியாட்சிகளில் ஒன்றாகும்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மயிலத்தமடு, மாதவனை விவகாரம்: வழக்கு தாக்கல் செய்யும் எம்.பிக்கள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு





மயிலத்தமடு, மாதவனை விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் உள்ள பண்ணையாளர்களை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் ஜனா என அழைக்கப்படும் கோவிந்தன் கருணாகரம் சார்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மூன்று தலைமுறைகளாக தாங்கள் அந்தப் பகுதியில் கால்நடைகளை வளர்த்துவருகின்றனர் எனவும், தற்போது தங்களை அங்குவரும் பெரும்பான்மையினர் அங்கிருந்து செல்லுமாறு அச்சுறுத்துகின்றனர் எனவும் மாடு வளர்க்கும் தமது பகுதிகளை உழுது பயிர்செய்வதற்கு முயற்சிக்கின்றனர் எனவும் பண்ணையாளர்கள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், இந்த விடயத்தில் தங்களுக்கு நீதி பெற்றுதர வேண்டும் எனவும் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இரா.சாணக்கியன் மற்றும் ஜனா என அழைக்கப்படும் கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

# மாகாண காணி, பொலிஸ் அதிகாரம் புதிய அரசமைப்பில் பறிபோகின்றது!

கொழும்பு, டிசெ.14

1978 ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தில் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உள்ளீர்க்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு அதிகாரங்களையும் தற்போது வரையில், பிரயோக ரீதியாக பயன்படுத்த முடியாத நிலையில் மாகாண சபைகள் காணப்படுகின்றன. குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாண சபைகளில் இந்த விடயத்தைக் கையாள முடியாத நிலைமைகளே நீடித்துக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் தற்போது பதவியில் உள்ள அரசாங்கம் புதிய அரசமைப்புக்கான செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. அதற்காக அரசியல் கட்சிகள், சிவில் தரப்பினரிடத்திலிருந்து முன்மொழிவுகளையும் கோரியுள்ளது.

இத்தகைய பின்புலத்தில் புதிய அரசமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும் என்ற கருத்தாடல்கள் பல்வேறு தளங்களில் நிலைபெற்று வருகின்றது. குறிப்பாக, மாகாண சபைகள் 'வெள்ளை யானைகளாக' இருப்பதாக தற்போதைய ஆட்சியாளர்கள் பல்வேறு தருணங்களில் பிரதிபலித்துள்ளனர்.

ஜனாதிபதியும், மாகாணசபையின் 68 சதவீதமான நிதி மக்களை நேரடியாக சென்றடையவில்லை என்ற கருத்தைக்கொண்டிருக்கிறார்எனஅவருடைய சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுடனான கலந்துரையாடலொன்றில் கூறியிருக்கின்றார்.

பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான செயற்திட்ட உடன்படிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் போது காணி அதிகாரங்கள் மாகாண சபையிடத்தில் காணப்படுமாயின் அதன் அனுமதியைப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற நிலைப்பாட்டையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொண்டிருக்கின்றார்.

அதேநேரம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், தமிழ்த் தரப்பொன்றுடனான கலந்துரையாடலொன்றில், பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்கினால் அநுராதபுர புனித நகருக்குச் சென்று போதி வழிபாடுகளைச் செய்வதாயினும் மாகாணத்தின் அனுமதியைப் பெறுவதற்குக் காத்திருக்க வேண்டி ஏற்படும் என்றும் கூறியிருக்கின்றார்.

மறுபக்கத்தில், 13ஆவது திருத்தச் சட்டமானது, இந்தியா இலங்கையின் இறைமையில் தலையீடு செய்வதற்கு காரணமாக இருக்கின்றது. ஆகவே இலங்கையின் ஆட்புல எல்லை சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காக அதனை புதிய அரசமைப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று உள்ளூராட்சி மாகாண சபையின் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்த ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

தற்போது அவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கின்றமையோடு தேசிய பொலிஸ் கட்டமைப்பும் அவருடைய அமைச்சின் கீழ் காணப்படுகின்றது. இந்நிலையில் அண்மையில் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் காணப்பட வேண்டும் என்று திட்டவட்டமாக அவர் கூறியுள்ளார்.

ஆகவே, அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் உள்ள நபர்கள், மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரும் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால், இந்தியா எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற கேள்விக்குப் பதிலளிக்க மறுத்துள்ளார்.

முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் நிறைவில், புதிய அரசமைப்பு உருவாக்கம் பெறும் போது 13 ஆவது திருத்தச்சட்டத்தை அதனுள் உள்ளீர்ப்பது தொடர்பில் இலங்கையின் இறைமையில் இந்தியா தலையிட முடியாத நிலைமை இருக்கின்றது என்ற தொனிப்பட சில பிரதிபலிப்புக்களை உயர்ஸ்தானிகர் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ்கிறீம் கடையில் நல்லூரில் தீ விபத்து!





யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஐஸ்கிறீம் கடையொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள குறித்த கடையின் சமையல் அறையிலேயே தீ ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், இடம்பெற்ற பகுதியில் யாழ்ப்பாணம் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக உடனடியாக மாநகர தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத்தீவிபத்துதொடர்பானவிசாரணைகளை மேற்கொண்டுவருவதாகயாழ்ப்பாணப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் பிறந்த சிசுவைப் புதைத்ததாக பெண் வழங்கிய வாக்கு மூலத்தால் பரபரப்பு!

கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் பெண் ஒருவர் பெற்ற தனது சிசுவைப் புதைத்தார் என பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

பிரமந்தனாறு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சில மணி நேரங்களுக்கு முன்னர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றார்.

அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள், அவருடைய உடலில் குழந்தை பிறந்தமைக்கான ஆதாரங்கள் காணப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருக்கின்றனர்.

இதையடுத்து அங்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், தனக்கு குழந்தை பிறந்ததாகத் தெரிவித்த அந்தப் பெண் குழந்தையை புதைத்துவிட்டதாகத் தெரிவித்திருக்கின்றார்.

இருந்தபோதிலும் புதைக்கப்பட்ட இடம் பிரமனந்தனாறு என்றும், உழவனூர் என்றும் மாறி மாறித் தகவல்களை வழங்கி வருகின்றமையால் குழந்தை புதைக்கப்பட்ட இடத்தைக் கண்டுபிடிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவம்தொடர்பான தொடர்விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 6 பேர் கைதாகினார்கள்!

## வவுனியா நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல்

வவுனியா, டிசெ.14

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் வீதியில் மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 6 நபர்களுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களில் வவுனியா நீதிமன்றில் பொலிஸாரால் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பட்டாணிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தின் முன்பாக கடந்த (05.12.2020) அன்று உயரழுத்த மின்சாரத் தூண்களை மின்சார சபை நிறுவ முற்பட்டதால் அப் பகுதியில் மின்சார சபைக்கு எதிராக வவுனியா - மன்னார் வீதியைத் தடை செய்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாக வவுனியா - மன்னார் பிரதான வீதி போக்குவரத்து 3 மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து இந்தப்போராட்டத்தை மேற்கொண்ட முக்கிய 6 நபர்கள் மீது வவுனியா மாவட்ட நீதிமன்றில் அரச ஊழியரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியமை, கொவிட் - 19 விதிமுறைகளை மீறி செயற்பட்டமை போன்ற பல குற்றச்சாட்டை முன்வைத்து வவுனியா பொலிஸாரால் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2020 இல் வெளியிடப்பெற்றது.